**நவம்பர் - 19**

**"நாம் தூங்கமால் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்." - 1தெச 5.6**

நமது தேவனாகிய கர்த்தருக்குப் பிரியமான ஊழியம் எதுவாயிருக்குமென்பது குறித்து அவர் கொடுத்திருக்கிற எல்லா வழிகாட்டுதலையும் கருத்தாய்க் கவனிப்பது என்ற அர்த்தத்தில் விழிப்புள்ளவர்களாயிருக்கக்கடவோம். மகாபெரிய பிரதான ஆசாரியனுடைய அடிச்சுவடுகளில் கிட்டத்தட்ட கூடுமானவரை நடக்க கஷ்டப்பட்டு முயற்சி செய்துகொண்டு நாம் நம்மையே காவல் செய்வோமாக. அறிவற்றவர்களாயிருக்க மாட்டோம் என்ற அர்த்தத்தில் தெளிந்தவர்களாய் இருக்கக்கடவோம். நம்முடைய பிதாவினுடைய குணம், ஏற்பாடு இவைகளின் பேரில் கொண்டுள்ள தவறான எண்ணத்தால் மற்ற அநேகரை ஆட்கொண்டிருக்கிற வியாகூலமாயுள்ள கவலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு கர்த்தரில் திருப்தியுடையவர்களாகவும், சந்தோஷமுள்ளவர்களாயும் இருக்கும் பொழுது, சந்தர்ப்பங்களும், சிலாக்கியங்களும் பின்பு வருத்தப்படும்படியாக நமது கைகளைவிட்டு நழுவிப்போகும்படியாக, ஜாக்கிரதையற்ற விதமாய் அசட்டையுள்ளவர்களாயிராமல், கர்த்தரின் ஊழியம் சம்பந்தமாயுள்ள தற்பொழுதுள்ள சந்தர்ப்பங்களையும், சிலாக்கியங்களையும் உயர்வாக மதிக்கிறோம் என்ற கருத்தில் நாம் தெளிந்தவர்களாயிருக்கிறோம். **- Z ’02, 239 (R 3054)**

விழிப்பு என்ற வார்த்தை காவலைக் குறிக்கிறது. இது நாம் ஆயுதம் தரித்தவர்களாயும், விழித்திருக்கிறவர்களாயும், நம்முடைய குணங்களையும், எண்ணங்களையும், நோக்கங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும், சூழ்நிலைகளையும் நம்மேல் செலுத்தப்படுகிற செல்வாக்கையும் மற்றவர்கள்மேல் நாம் செலுத்துகிற செல்வாக்கையும் ஆராயவும், நம்முடைய மனது, இருதயம் இவைகளாகிய பாளயத்துக்குள் நுழைகிற எல்லாவற்றையும் வெளியேறுகிற எல்லாவற்றையும் எதிர்க்கவும், அவைகளுடைய சிநேகபான்மையின் உரிமையை சந்தேகிக்கவும், அப்படிப்பட்ட உரிமைக்கு அத்தாட்சி கொடுக்கக்கூடாதவைகளை பிடிக்கவும், அப்படிப்பட்ட அத்தாட்சியின் பேரில் வெளியே செல்லுதலையும், உள்ளே செல்லுதலை அனுமதிக்கவும் நம்முடைய கடமைகளையும், சிலாக்கியங்களையும் கொண்டுள்ள முழு எல்லையையும் ஆராயவும், பொறுப்பேற்று விடுவிக்கப்படும் வரை காவல் வேலையில் தொடர்ந்து இருக்கவும் யோசனை கூறுகிறது.குணம், கருத்து இவைகளின் சமநிலையே தெளிந்தவர்களாயிருப்பதைக் குறிக்கிறது. நம்முடைய போரில் கலந்து கொள்ளுகிறவர்களைப்பற்றி மட்டுக்கு மிஞ்சி மதிப்பிடாமல் அல்லது குறைத்து மதிப்பிடாமல், நமது பலவீனங்களையும், தேவைகளையும், நோக்கங்களையும் நாம் அடைந்திருக்கிறவைகளையும், நம்முடைய விரோதிகளுடைய இக்காரியங்களையும் நம்முடைய தலைவரின் வல்லமை, நோக்கங்கள், உதவிகள் நமது போரின் கஷ்டங்கள், அது நீடிக்கும் காலம், நோக்கம், உண்மையாயிராதவர்களுக்கு தோல்வியின் நிச்சயம், உண்மையுள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஜெயம் ஆகிய இவையாவையும் அறிந்து கொண்டு, இப்படிப்பட்ட எண்ணங்களின் மூலமாக பெரிய தொடர்ச்சியான கவனத்தை செலுத்துவதையும் குறிக்கிறது.
**- P ’36, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யாத் 23:13; 34:12; உப 4:9,23; யோசு 22:5; 1ராஜா 8:25; சங் 39:1; 141:3; நீதி 4:23; மல் 2:15; மத் 16:6; 24:4; 26:40,41; லூக் 11:35; அப் 20:28-31; 1கொரி 10:12; 16:13;எபே 5:15; 6:18; 1தீமோ 4:16; எபி 2:1; 3:12; 1பேது 1:13; 4:7; 5:8.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 181 (R 5256).**

**வினாக்கள் : இந்த வசனத்தில் சொல்லப்பட்டவற்றை இந்த வாரத்தில் நான் கவனித்தேனா? எப்படி? ஏன்? அதன் விளைவு என்ன?**